




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அரசு அலுவலர்களுக்கான இலவச மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (20.02.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 127/2017 நாள்: 20.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அரசு அலுவலர்களுக்கான இலவச மருத்துவ முகாமினை இன்று (20.02.2017) துவக்கி வைத்தார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அரசு அலுவலர்களுக்கான இலவச மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (20.02.2017) துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தை பொறுத்தவரை, 40 வயதுக்கும் அதிகமானோர்கள், அரசு அலுவலர்களாக பணியாற்றி வருகிறார்கள். அரசு அலுவலர்களாகிய நாம், பணியிலே அதிக கவனம் செலுத்தும் வேளையில், நமது உடல்நலன் பற்றி கவனம் செலுத்த மறந்து விடுகிறோம். எனவே, நமது அலுவலர்களின் உடல்நலனை மேம்படுத்தும்வகையில், வருவாய்த்துறையின் மூலம், அரசு அலுவலர்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறுகிறது. இம்முகாமில் இரத்த அழுத்தம், நுரையீரல், இருதய பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவம் போன்ற பரிசோதனைகள் செய்யப்படவுள்ளது. அரசு அலுவலர்களின் உடல்நலம் நன்றாக இருந்தால்தான், அலுவலக பணிகள் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்ட ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிறப்பு மருத்துவர்களாலும், சிப்லா (CIPLA) மருத்துவ நிறுவனத்தாலும் பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவர்களாலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக, நிலவேம்பு குடிநீரினை அரசு அலுவலர்களுக்கு வழங்கினார்.

முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், வட்டாட்சியர்கள், மரு. ரியாஸ் அகமத், மரு. ஜோசப் பிரதீபன் (நுரையீரல்), மரு. கீதா (பொது மருத்துவம்), கண் மருத்துவர்கள் மரு. பெஜான்சிங், மரு. ரெபாய்கான், மரு. ஷாலில் அகமத் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.